பத்து வயதான சிறுமி சினேகா, சிரிப்பும் விளையாட்டுமாக தேவாலய வளாகத்தை நோக்கி நடந்தாள். இன்று வருடாந்திர வேத மாநாடு. தேவாலயத்தை சென்றடைந்ததும், அவளுக்குக் கிடைத்த இடத்தில் அவள் அமர்ந்தாள். பிரசங்கியார் பிரசங்கத்தைத் தொடங்கினார். பிரசங்கத்தின் போது அவர் ஒரு கதையைச் சொல்லத் தொடங்கினார். எல்லா வயதினரையும் கவரும் அந்தக் கதையைக் கேட்க, சினேகா மிகுந்த ஆவலுடன் இருந்தாள்.

பிரசங்கியார் தொடர்ந்தார் – ஒரு சமயத்தில், "தேவனுடன் மனிதன் நடக்க முடியும்" என்ற ஒரு கூற்றை ஒரு மனிதன் கேட்டான். அந்தச் சொல் அவனுடைய இதயத்தில் ஒரு பெரிய அசைவையும் ஆவலையும் உருவாக்கியது. அவனது இதயம் தேவனுடன் நடக்க ஏங்கியது. அவன் இப்படி ஜெபித்தான்:

"தேவனே, நான் உமது குரலைக் கேட்க விரும்புகிறேன். நான் உம்மோடு நடக்க விரும்புகிறேன்" என்று.

அந்த மனிதனின் இதயத்திலிருந்து எழுந்த ஜெபத்தை தேவன் கேட்டார். இதன் விளைவாக, தேவன் தன்னுடன் இருப்பதாக நம்பிய அந்த மனிதன், தேவனுடன் பேச ஆரம்பித்தான். தனது சாப்பாட்டு மேசையிலும், படுக்கையறையிலும் தேவனுக்காக ஒரு சிறப்பு இருக்கையை வைத்திருந்தான். அங்கே தேவன் அமர்ந்திருப்பது போல் கற்பனை செய்து, அவன் உரையாடத் தொடங்கினான்.

மெல்ல மெல்ல, அவன் தேவனிடமிருந்து ஒரு குரலைக் கேட்க ஆரம்பித்தான். அவனது இத்தகைய நடைமுறைகளைப் பார்த்த பலர், அவனுக்கு மனநலம் சரியில்லை என்று நினைத்தனர். இருப்பினும், தேவனின் பிரசன்னத்தின் இனிமையை உணர்ந்த அந்த மனிதன், அதை பொருட்படுத்தவில்லை. தேவனுடனான அவனது நடை, நாளுக்கு நாள் ஆழமானதாகவும் வலிமையானதாகவும் வளர்ந்தது.

ஒரு நாள் காலை, அவனது மனைவி அவனுக்கு காப்பி கொண்டு வந்தபோது, அவன் தன் படுக்கையில் படுத்திருந்தான். தேவன் அமர்ந்திருப்பதாக அவன் நம்பிய அதே இடத்தில், நாற்காலியில் அமர்ந்திருக்கும் ஒருவரின் கையைப் பிடித்துக்கொண்டிருக்கும் பாணியில், அவன் படுக்கையில் கிடப்பதைக் கண்டாள்.

அவனை அவள் உலுக்கி எழுப்ப முற்பட்டபோது தான், தேவனுடன் நடந்த அந்த மனிதன், தன் நேசத் தேவனின் கரத்தைப் பற்றிக்கொண்டு பேரின்பப் பரதீசுக்குப் பறந்து சென்றுவிட்டான் என்பதை உணர்ந்தாள்.

கதையைக் கேட்டுக்கொண்டிருந்த சிறுமி சினேகா, யாரும் பார்த்து விடாதபடி, தன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தாள். அன்றே அவள் தன் இதயத்தை தேவனுக்குக் கொடுத்தாள். அவள் உடைந்த இதயத்துடன் இவ்வாறு ஜெபித்தாள்: “என்னுடன் பேசக்கூடிய, என்னுடன் நடக்கக்கூடிய, இறுதியில் என்னைத் தம் கையில் ஏந்தி பரலோக ராஜ்யத்திற்கு அழைத்துச் செல்ல வல்லமையுள்ள ஒரு தேவன் உண்டானால், அத்தகைய தேவன் எனக்கும் வேண்டும்.” என்று.

அந்தச் சிறிய இதயத்தின் ஜெபத்திற்கு தெய்வீகமான பதில் வந்தது. சினேகாவின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றம் வெளிப்படத் தொடங்கியது. அவள் மறுபிறப்பை நெருங்கிக்கொண்டிருந்தாள் (யோவான் 3:3).

அவள் வசனத்தின் மீது அதிக தாகம் கொண்டாள்; அவள் வேதத்தை தொடர்ந்து வாசித்தாள். அவள் வேதத்தைத் திறந்தபோது ஒரு வசனம் அவள் கவனத்தை ஈர்த்தது – “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.” (சங்கீதம் 119:105).

இந்த வார்த்தை அவளுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அஸ்திபாரமிட்டது. தேவன் வார்த்தையின் மூலம் பேசுகிறார் என்றும், அந்த வார்த்தை இருண்ட உலகில் ஒளியாக வழிநடத்தும் என்றும் அவள் உறுதியாக நம்பினாள். கர்த்தர் அவளுடன் பேசத் தொடங்கினார்.

முதலில், வேதவாக்கியங்கள் அவளைப் பாவத்தைக்குறித்த உணர்விற்குக் கொண்டு சென்றன. ஒரு வசனம் அவளை ஆழமாகத் தொட்டது:

“நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ளுகிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை ‘ராகா’ (வீணனே) என்பவன் ஆலோசனைச் சங்கத்திற்கு ஏதுவாயிருப்பான்; ‘மூடனே’ என்பவன் நரக அக்கினிக்கு ஏதுவாயிருப்பான்.” – மத்தேயு 5:22.

தான் ஒரு பாவி என்பதையும், தன் கோபமும், மற்றவர்களை இகழ்ந்து பேசும் இயல்பும் தன்னை நரகத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதையும் அவள் புரிந்துகொண்டாள். அவை அனைத்தையும் வெறுத்துத் தள்ளுவது அவசியம் என்பதையும் உணர்ந்தாள். அவள் தேவனுடைய சந்நிதியில் கதறினாள்.

தேவனுடனான உறவில் வளர வளர, வேத வசனங்கள் அவளுடைய பாவ குணங்களை மேலும் வெளிப்படுத்தியது. அச்சமயம், அவள் பெயரளவில் கிறிஸ்துவத்தை கடைப்பிடிக்கும் ஒரு குழுவில் இருந்தாள்; அங்கே நடைமுறையில் இருந்த விக்கிரகாராதனை (யாத். 20:4–5: "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்"), மரித்தவர்களிடம் பரிந்துரைக்கும் ஜெபம் (1 தீமோத்தேயு 2:5 "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே."), மற்றும் குழந்தை ஞானஸ்நானம் (மாற்கு 16:16 "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.") போன்றவை வேதத்திற்குப் புறம்பானவை என்று அவள் அறிந்துக்கொண்டாள்.

உலக சிநேகம், பொய் பேசும் குணம், மற்றும் ஊடக அடிமைத்தனம் போன்ற மாம்சத்தின் கிரியைகளால் கட்டப்பட்டு நரக வாசல்களை நோக்கிச் செல்கிறாள் என்பதையும் உணர்ந்து, சினேகா, பயத்தால் இவ்வாறு கதறினாள்:

"இயேசுவே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று!

சிறுமி சினேகாவின் ஜெபத்தைக் கேட்ட இயேசு கிறிஸ்து, அவளை நீதியின் வழியில் நடத்தினார். சினேகா விரும்பியபடியே, தேவனின் குரலைக் கேட்க ஆரம்பித்தாள். ஏனெனில் ஏங்குகிற இருதயங்களைத் திருப்திப்படுத்தும் தேவன், தம்மை முழு இருதயத்தோடு தேடுகிறவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார்.

சினேகா, தேவனைப் பற்றிய கூடுதல் வெளிப்பாடுகளைப் பெற்றாள். எங்கும் நிறைந்த சர்வவல்லமையுள்ள தேவன், பொருட்களுக்குள்ளோ, சிலைகளுக்குள்ளோ, அல்லது மனித கைகளின் வேலைப்பாடுகளுக்குள்ளோ வைக்கப்படக்கூடியவர் அல்ல; மாறாக, தமது கரத்தின் கிரியையாகிய மனித இருதயங்களில் வாசம்பண்ண விரும்புகிறார் (ஏசாயா 40:12; அப்போஸ்தலர் 7:48) என்று.

தேவனுடன் நடக்க விரும்பிய சினேகாவுக்கு, விசுவாசத்தினாலே, கிறிஸ்து அவளது இருதயத்தில் வாசம்பண்ணும்படியான பாக்கிய-த்தை பெற்றாள் (எபேசியர் 3:17). கிறிஸ்து அவளுக்குள் வாசம் பண்ண ஆரம்பித்ததும், அவள் கனி கொடுக்க ஆரம்பித்தாள் (யோவான் 15:5).

அவளுடைய உறவினர்கள், மற்றும் நண்பர்கள் பலர், இந்தச் சத்தியத்தை அறிந்து, அவர்களும், அநேகரை சத்தியத்தின் வழியில் நடத்துபவர்களாக ஆனார்கள்.

சிறுமி சினேகாவும், “தேவனுடைய சிநேகிதரின்” கூட்டத்தில் கிருபையினால் சேர்க்கப்பட்டாள் (யோவான் 15:14–15).

பிரியமானவர்களே, இது சினேகாவின் அனுபவம்! நாம் என்ன சொல்ல முடியும்? நாம் இரட்சிக்கப்பட்டவர்களா? பதில் ஆம் என்றால், அந்த நாளின் இனிமையான நினைவு நம்மை மகிழ்விக்கும். ஆனால் அப்படிப்பட்ட நாளை நினைவுகூர முடியாவிட்டால், இயேசுவோடு ஒரு தனிப்பட்ட சந்திப்பின் அனுபவமில்லாதவர்களாக நாம் இருப்போம் என்றால், நிச்சயமாக இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவிக்காதவர்கள் நாம்! நம் வாழ்வில் ஒருநாளாவது, நம் இதயத்தின் ஆழத்திலிருந்து “நான் ஒரு பாவி! இந்தப் பாவம் என்னை நரகத்திற்குக் கொண்டு செல்லும்! நான் இனி பாவத்தில் வாழ விரும்பவில்லை! தேவனே, என்னை பாவத்திலிருந்து விடுதலையாக்கும்!” என்றுக் கதறியிருக்கவில்லையென்றால் – அப்படியான ஒரு நேரம் நம் வாழ்வில் இல்லையென்றால், நாம் இன்னும் இரட்சிப்பின் மகிழ்ச்சியின் மகிமையை அனுபவிக்காதவர்கள். அந்த இனிமையான அனுபவத்தை நாம் எங்கேயோ நழுவவிட்டிருக்கிறோம். நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று நம்மை குறித்து ஒருவேளை நாம் சொல்லிக்கொள்ளலாம் – ஆனால், அது வீணான பெருமை மட்டுமே. உண்மையில், நாம் இரட்சிக்கப்படவில்லை!

அதனால், இன்று நீங்கள் இரட்சிக்கப்பட முழு மனதோடு இவ்வாறு ஜெபிக்கலாம்:

“கர்த்தர் இயேசுவே, நான் ஒரு பாவி; என்மேல் கிருபையாயிரும். இயேசு கிறிஸ்து ஒருவரே தேவன் என்றும், அவர் என் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்றும் நான் விசுவாசிக்கிறேன். இந்த இயேசுவே என் ஆண்டவர் என்று அறிக்கை செய்து, அவரை என் இதயத்தில் வரவேற்கிறேன், ஆமென்!.” (ரோமர் 10:9–10) என்று.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:
மலங்காரா கிறிஸ்தவ தேவாலயம், ராமமங்கலம்
PH: +919496497772 Email: godreveals2020@gmail.com